Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 08 விலை ரூபா: 3·50

# ஈழநாதம்

THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹூ புரட்டாதி மீ 10 உ புதன்கிழமை (26 - 09 - 1990) ஹிஜ்ரீ 1411 ரபி. அப். 06 ஓசை 220

## ஐ. நா. தடையை ஜோர்டான் மீறியது

(அம்மான்)

ஈராக் மீதான பொருளாதாரத் தடையை மீறி 30 ட்ரக்குகளில் ஜோர்டான் உணவுப் பொருட்களை அனுப்பி வைத்துள்ளது. ஈராக்கிற்கு ஐ. நா. சபையின் தடையை மீறி முதலாவது உணவு அனுப்பிய நாடு ஜோர்டான் ஆகும். ஜோர்டானில் இருந்து உணவு அனுப்பும் வைபவத்தில் பல ஆயிரக்கணக்கான ஜோர்டானியர்கள் கலந்து கொண்டதோடு ஈராக்கிற்கு ஆதரவான கோஷங்களையும் (8ஆம் பக்கம் பார்க்க)

### பாவற்குளம் முதலாம் யுனிட் பகுதியில்

# இரு மணி நேரம் புலிகள் இராணுவம் கடும் மோதல்

[வவுனியா]

வவுனியா மாவட்டத்தில், பாவற்குளம் முதலாம் யுனிட் இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் இரண்டுமணிநேரம் நடந்த கடும்சண்டையின் பின்னர் இராணுவத்தினர் முகாமுக்கு பின்வாங்கிச் சென்றனர். இவர்களிடமிருந்து ஆயுதங்கள் சில புலிகளால் மீட்கப்பட்டன.

மேற்படி முகாமில் இருந்து நேற்றுக்காலை 7.30 மணியளவில் வெளியேறிய இராணுவ அணி ஒன்று அருகில் உள்ள மலைப்பகுதிக்குச் சென்றது. இவர்களை அப்பகுதியில் வைத்துச் சுற்றிவளைத்த விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கடும் மோதல் ஏற்பட்டது.

சுமார் இரண்டுமணித்தியாலம் நடந்த கடும் சண்டையைத் தொடர்ந்து இராணுவம் பலத்த இழப்புகளுடன் பின்வாங்கியது.

இந்த மோதலில் இராணுவத்துக்கு ஏற்பட்ட உயிர்ச்சேதம் பற்றி அறிய முடிய (8 ஆம் பக்கம் பார்க்க)

## தொடர்மாடி வீடுகள் சேதம்

(விசேடநிருபர்)

நேற்று காலை மண்டைதீவில் இருந்து ஏவப்பட்ட ஷெல்களில் சில குருநகர் தொடர்மாடிப் பகுதியில் வீழ்ந்து வெடித்தன.

தொடர்மாடி வீடுகளும், வீட்டு உடைமைகளும் சேதம் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்து சென்றிருந்ததால் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. (21)

## மனோகரன் சுட்டுக் கொலை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோயில் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்ட மனோகரன் என்ற தமிழ் இளைஞரை கடந்த ஞாயிறு (23-9-90) அன்று இராணுவத்தினர் சுட்டுக் கொலை செய்துள்ளனர். (க)

## தனி நபர் ஆணைக்குழு

சிறிலங்காவில் இன்று சர்ச்சையைக் கிளப்பியுள்ள மொசாட் உளவாளியின் தகவல்கள் தொடர்பாக முழுமையான விசாரணை ஒன்றை நடத்த தனிநபர் ஆணைக்குழு ஒன்றை சிறிலங்கா ஜனாதிபதி நியமித்துள்ளார்.

## வவுனியா நகர் செல்லும் தமிழர் மர்ம மறைவு

(வவுனியா)

வவுனியாவில் நகரப்பகுதிக்குச் செல்வோர் திடீர்திடீர் என்று காணாமல் போய்விடுகிறார்கள்.

அரச ஊழியர்கள் உட்பட பலர் இவ்வாறு காணாமல் போகிறார்கள்.

கடந்த 20 ஆம் திகதி சாஸ்திரிகூழாங்குளம் கிராமசேவையாளர் திரு. சிவராஜா நகரப் பகுதிக்குச் சென்று திரும்பிவரவில்லை. இதுபற்றி வவுனியா அரசாங்க அதிபரிடம் உறவினர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இராணுவ உளவாளிகளினால் (8 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா ராஜதந்திரி சென்னையில் தடுத்துவைப்பு

(சென்னை)

சென்னையிலுள்ள சிறிலங்கா ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்த சிறிலங்கா ராஜதந்தி ஒருவர் சென்னைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு ஒரு நாள் முழுவதும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப் பட்டுப் பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

அவர் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியதைத் தொடர்ந்தே பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து (8 ஆம் பக்கம் பார்க்க)

## தம்பிலுவிலில் கைதான 50 தமிழர் பற்றி விபரமில்லை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தம்பிலுவில் என்ற கிராமத்தை சுற்றிவளைந்த சிறிலங்கா இராணுவத்தினரும் ஊர்காவற்படையினரும் அங்கிருந்து ஐம்பது தமிழர் (8 ஆம் பக்கம் பார்க்க)

## வலுக்கட்டாயமாக அகதிமுகாமுக்கு ஆட்சேர்ப்பு

(வவுனியா)

வவுனியா நகரப் பகுதியில் சிறிய சிறிய பாடசாலைகளிலும், கோயில்களிலும் அகதிகளாகத் தங்கியுள்ள மக்கள் இராணுவத்தினரால்வற்புறுத்தப்பட்டு வவுனியா தமிழ்மகா வித்தியாலயத்தில் அமைக்கப் பட்டுள்ள அகதி முகாமுக்கு அழைத்துச்செல்லப்பட்டுதங்க வைக்கப்படுகின்றனர்.

முடிந்தால்வீடுகளில் தங்குங்கள். முடியாவிட்டால் அகதி (8 ஆம் பக்கம் பார்க்க)

## 3,000 புலிகளை அழிக்க 60,000 படையினர் தேவை

மூவாயிரம் விடுதலைப்புலிகளை அழித்தொழிக்க 60,000 படையினர் தேவை என முன்னாள் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி த ஐலன்ட் ஆங்கிலத் தினசரிக்குத் தெரிவித்துள்ளார்.

கெரிலாக்களுக்கு எதிராகப் போராடுவதாயின் அதிக எண்ணிக்கையைக்கொண்ட பெரும் படைப்பிரிவு அவசியம் என அவர் அதில் வற்புறுத்திக்கூறியுள்ளார். இலங்கையில் புலிகளுக்கு எதிராகப் போராடிய ''இந்திய அமைதிப்படை'' தனது அனுபவத்தின் மூலம் (8 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று மாலையும் நகர் மீது குண்டு வீச்சு; ஷெல் தாக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர் மீது நேற்று மாலையும் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் தாக்குதல் நடத்தியது.

மாலை 4.00 மணியளவில் அவ்ரோ விமானம் ஒன்று கோட்டை முகாமிற்கு பல தடவை பொதிகளை போட்டு சென்றபின் இரண்டு பொம்மர் விமானங்கள் நகர்மீதும், கோட்டை சுற்றாடலிலும் குண்டுகளை வீசியது. இதனால் நகரில் சில கட்டிடங்கள் சேதமடைந்தன.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தெற்கில் காணாமற் போவோர் கதை தொடர்கின்றது

(கொழும்பு)

சிறிலங்காவின் தென்பாகங்களில் இளைஞர்கள் திடீர் எனக் காணாமற் போவதும் படுகொலை செய்யப்படுவதும் தொடர்கின்றதென செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரத்தில் மட்டும் வீதியோரங்களில் எரிந்த நிலையில் 27 இளைஞர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் குறிப்பிடுகின்றன. சிறிலங்கா ஆயுதப்படையினரால் ஜே. வி. பி. இயக்கத்தினர் என்ற பேரில் கைதுசெய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர்களே அனேகமாகக் காணமற் போவதாகவும் தெரியவருகின்றது.

அதேவேளை காணாமற் போனவர்கள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்கு அங்குள்ள மனிதஉரிமை இயக்கத்தைச்சேர்ந்தவர்கள் அச்சம் தெரிவிப்பதாகவும் தெரியவருகின்றது.

# திலீபன் நினைவாக ஊர்தி பவனிகள் உண்ணாவிரதங்கள், பிரார்த்தனைகள்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசு இடைவெளியின்றி யாழ். குடாநாடு முழுவதும் ஊரடங்குச்சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்து குண்டு வீச்சு விமானங்களையும், ஹெலிகொப்ரர்களையும் ஊரடங்குச் சட்டத்தை அமுல் செய்வதற்குப் பயன்படுத்திப் பெரும் பிரயத்தனங்களைச் செய்து வந்த போதிலும் யாழ். குடாநாடு பூராவும் திலீபனின் எழுச்சி வீட்டுக்கு வீடு, ஆலயத்துக்கு ஆலயம், தெருத்தெருவாக இன்று கொண்டாடப்பட்டு வருகிறது.

வடமராட்சி, வலிகாமம், தென்மராட்சி ஆகிய மூன்று பகுதிகள் உட்பட அண்மையில் இராணுவ அட்டூழியங்களால் சீர்குலைந்து போன தீவுப்பகுதிகளிலும் திலீபனின் எழுச்சி அலை பரவியுள்ளது.

நேற்று காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியில் காலை எட்டு மணியிலிருந்து உண்ணாவிரதமும், மாலை நான்கு மணி அளவில் மாபெரும் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. இக்கூட்டத்திற்குஎதிர்பாராத (8 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

போட்டோஸ்ரட்

போட்டோஸ்ரட் பிரதிகளைப் பெற்றுக் கொள்ள இளீன்கட் 37, சிவகுருநாதர் லேன், பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். வேலை நேரம் 10 மணிக்கும் 3 மணிக்கும்இடையில் (R-645)


# கிளிநோச்சி மக்களுக்கு தென்னிந்திய திருச்சபை உதவி

(கிளிநொச்சி)

இராணுவ நடவடிக்கைகளினால் பாதிப்புக்குள்ளான கிளிநொச்சி மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக தென்னிந்திய திருச்சபை 17 லொறிகளில் அத்தியாவசிய உணவுப்பொருட்களை ஏற்றிக் கொண்டு மூன்று தினங்களுக்கு முன் கிளிநொச்சி வந்து சேர்ந்தது.

இவை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆதரவுடன் கொண்டு வரப்பட்ட போதிலும், அனுமதிக்காத லொறிகள் இரண்டு தினங்கள் வவுனியாவில் காத்து நிற்க வேண்டி ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. (நி)

# மண்ணெண்ணெய் போத்தல் 25 ரூபா

திங்கட்கிழமை 24 ஆம் திகதி சுன்னாகம், இணுவில் பிரதான சந்திகளில் மண்ணெண்ணை போத்தல் 25 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

ஏராளமான விவசாயிகள் கலன்களில் மண்ணெண்ணையை வாங்கிச் சென்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

அண்மையில் மண்ணெண்ணை போத்தல் 175 ரூபா வரை விற்பனையானது தெரிந்ததே. (24)


## திலீபம்



தீபன்
அணைந்த போது
'திலீபம்' எழுந்தது!
மெழுகு வர்த்திகள்
வெட்கித்து நிற்க
தியாகத்தின் சிகரம்
புலப்பட்டது! - அன்று
தமிழீழத்திற்காக அவன்
தன்னையே ஈந்த போது
கண்ணீர் மழையால்
மக்கள் வெள்ளம்
பிரவாகித்தது! - இன்று
கோர யுத்தத்தில்
'திலீபம்' பிரகாசிக்கிறது!
அவன் கனவுகளை
நனவாக்கி.

சங்குவேலி, உடுவில் தெற்கு
சிற்றூரவைகள்

(R/658)


# திருடர் தொல்லை அதிகரிப்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் இரவு நேரத் திருடர்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. பெரும்பாலும் வீடுகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் துவிச்சக்கர வண்டிகளே (சைக்கிள்களே) திருடப்பட்டு வருகின்றன. அண்மையில் பத்தாம் வட்டாரத்தில் உள்ள வீடொன்றில் இருந்து ஒரு சைக்கிள் திருடப்பட்டது. தொடர்ந்து இம் மாதம் பதினெட்டாம் திகதி செவ்வாய்க் கிழமை இரவு அதே இடத்தில் உள்ள மயில்வாகனம் என்பவருடைய வீட்டில் இருந்து 'றலி', லுமாலா ஆகிய ரகங்களைச் சேர்ந்த இரண்டு சைக்கிள்கள் ஒரே நேரத்தில்திருடப்பட்டுள்ளன. இத்தகைய திருட்டுச் சம்பவங்களை அடுத்து இப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.


## திலீபனின் நினைவஞ்சலி



நான் என்றும் உங்களை விட்டுப் போக மாட்டேன். எங்கள் உடல் மட்டும் தான் போகும் உயிர் உங்களோடுஒட்டியிருக்கும். விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரை தமது லட்சியம் தான் முக்கியம். உயிர் முக்கியமல்ல. அதை நிலைநாட்டவே நான் தலைவரால் முதல்முதல் நியமிக்கப்பட்டேன். நான் என் உயிரிலும் மேலாக நேசிக்கும் மக்களே! உங்களிடம் ஒரு பொறுப்பை விட்டுச் செல்கின்றேன், நீங்களனைவரும் பரிபூரணமாக கிளர்ந்தெழவேண்டும். இங்கு ஒரு மக்கள் புரட்சிவெடிக் கட்டும்''

மானிப்பாய் மக்கள்

(B.142)



# லெப். கேணல் தியாகி திலீபனின்

# மூன்றாவது ஆண்டு நினைவு அஞ்சலி





''ஏற்கனவே நான் உயிர்வாழ்வது அதிசயமாக இருக்கிறது. ஏனெனில் நான் முதல் நாள் உண்ணா விரதமிருந்ததை விட அதற்கு அடுத்த அடுத்தநாள் மேலும் உற்சாகமாயிருக்கின்றேன். காரணம் நீங்கள் தரும் ஆதரவும், நீங்கள் இந்தப் புரட்சிக்கு தயாராகி விட்டதும்தான். அந்த ஒன்றேபோதும் நான்சாகலாம். 650 பேருடன் 651 வனாக நான் போகின்றேன். என்னைப்பற்றி யாரும் வீணே கவலைப்படாதீர்கள், அலட்டிக்கொள்ளாதீர்கள், ஆனால் நீங்கள்புரட்சிக்கு தயாராகுங்கள். தயவுசெய்து இலட்சியத்தைக் கைவிடுமாறு கேட்கவேண்டாம். நீங்கள் அவ்வாறு கேட்பது இலட்சியத்தை அவமதிப்பது போலாகும். நான் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்வது எமது போராட்டம் தொடரும், மக்கள் புரட்சி வெடிக்கப் போகிறது. அந்தப் போராட்டத்திற்கு நீங்கள் தயாராகுங்கள், நீங்கள் பேராடுங்கள் நான் மேலே இருந்து தமிழீழம் அமைவதைப் பார்த்துக்கொண்டிருப்பேன்.''

கோண்டாவில் கிழக்கு
வர்த்தகர்கள்

(B.1424)

# கொழும்பு செல்வோர் வவுனியா அகதி முகாங்களில்

(வவுனியா)

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்வோரை வவுனியாவில் இராணுவத்தினர் கைது செய்து அகதி முகாம்களில் வைத்துள்ளனர்.

கடந்த ஐந்து நாட்களாக பயணிகளை வவுனியாவில் உள்ள சிறிலங்கா இராணுவத்தினர் பலவந்தமாக கைது செய்து அண்மையில் அரசினால் வவுனியாவில் அமைக்கப்பட்ட அகதி முகாம்களில் தங்கவைத்துள்ளனர். இந்த முகாமைச்சூழ இராணுவத்தினர் காவல் கடமையில் ஈடுபட்டுள்ளனர். (க)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



காந்தி பிறந்தான்
அகிம்சை மலர்ந்தது - வென்றது
காந்தி மறைந்தான்
காந்தியம் மறையவில்லை!
திலீபனின் வழியில் முன்னின்றது
காந்தி தேசத்தவர்
திலீபனை மறைவித்தார்
அன்றுடன்
காந்தியமும் இறந்தது!

காரைநகர் தென் மேற்கு
சிற்றூரவை

(R-661)

# 3 ஆம் ஆண்டு நினைவாக



## ஈழத்துக் காந்தி திலீபன்

தமிழீழமண்மீட்பிற்காகவும், அகிம்சைப் போராட்டத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாகவும், தன் உயிரிலும் மேலாக தன் இனத்தின் விடிவிற்காக நீராகாரமற்ற உண்ணாநோன்பிருந்து தன் உயிரை அர்ப்பணித்துக் கொண்ட ஈழத்துக் காந்தி எங்கள் தியாக தீபம் திலீபனே! உன் நாமத்தை நாம் மறவோம்.

கொழும்புத்துறை
சிற்றூரவையும், பொதுமக்களும்

(B/1426)

## முதலுதவி வகுப்பு

(உடுவில்)

காலத்தின் தேவை கருதி சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவினால் உடுவில் அமெரிக்கன்மிசன் பாடசாலையில் முதலுதவிப் பயிற்சி வகுப்பு ஒன்று நடத்தப்பட்டு வருகிறது.

பயிற்சி பெற விரும்புபவர்கள் திங்கள், வெள்ளி மாலை 4.30 பணிக்கு சமுகம் தரும்படியும் பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படுவதோடு முதலுதவி மையங்களில் சேவையாற்றவும் பணிக்கப்படுவர். (க)

## ஷெல்லினால் ஒருவர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலுள்ள மௌலதீவு இராணுவ முகாமில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலால் குறிஞ்சாமுலையைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்தார். (க)

# எங்கள் திலீபன்

'அகதி'யென்ற பெயர்ப் பலகை தாங்கி
ஆழி கடந்து ஓடுகின்ற எம்மினத்தில்;
சகதியிலும் உழன்று விட்டு சாக்கடையில் மிதந்துவிட்டு
பல ரூபாய்களை அனுப்புகின்ற கூட்டம் போக,
ஆயுள் நீடிக்கவென அட்சரக் கூடு கட்டும்
எம்மினத்திலும்; குட்பிகளைத் தொங்கப்போட்டே;
மயிலெனவும் குயிலெனவும் தாவிடும் ஆசைகளையும்
மாய்த்தார்கள் புலிப்படையில் சேர்வதற்கே!

இம் மாபெரும் புலிப்படையின் முத்துக்களில்
தனித்துவமான தியாகத் திலீபமும் ஒன்று!


காந்தி மகான் வழித் தோன்றல்களுக்கே
கரி பூசியுமே வென்று விட்டான்
சாந்தி கலைந்துவிட்ட சங்கத் தமிழுக்கு
தன்மானமுமே சேர்த்து விட்டான்
தேகம் ஓயலாம் தாகங்கள் ஓய்வதில்லையென
தேசத்தில் சாதித்தே விட்டானவன்
யாகம் வளர்த்தான் ஆகாரமின்றியே;
யாசிப்பது எம்மினம் அல்ல என்பதனால்!

ரிஷி ரெக்ஸ் வல்வெட்டித்துறை.
ஸ்ரீ வாணி அச்சகம் அச்சுவேலி.
கிளை: உடுப்பிட்டி.

(R/654)

## தியாகி லெப். கேணல் திலீபனுக்கு

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலிகள்...



கைத்தொழில் வர்த்தக சங்கம்
சாவகச்சேரி

## காலமெல்லாம் தமிழ் மடியில்....

தேரோடும் நல்லை வீதியிலே
செந்தமிழின் மீட்சி நாடி
நீரோடும் கண்களோடு
நாமெல்லாம் பார்த்திருக்க
அணுவணுவாக உயிரைக் கொடுத்த
உத்தம திலீபா!
காலம் வெல்லும்
களத்தினில் எங்கள் புலிக்கொடி பறக்கும்
ஈழ வேள்வியில் ஆகுதியானாய்
தமிழ் —
ஈழம் உன்றன் காலடியில் படைப்போம்!
காலமெல்லாம் தமிழ் மடியில்
எம் —
கண்மணியே நிம்மதியாகத் தூங்கு!

(R-657)

# திலீபன்...

## பொறுப்புணர்ச்சியி...


## வழிகாட்டி



விளைகின்ற பருவத்து வீரம்
அலர்கின்ற பருவத்து தியாகம்



மக்கள் புரட்சி வெடிக்கட்டும்
சுதந்திர தமிழீழம் மலரட்டும்...



நண்பரின் அணைப்பில்
நம்மினத் திலீபம்...

1987ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் காலை 10மணி 48 நிமி. அந்தக் கணத்தில் எங்கள் இதயங்கள் கூட அடிக்க மறந்துவிட்டன உயிரினங்கள் யாவும் சுவாசிக்கத் தவறவிட்ட கணப்பொழுது அது. எல்லோர் விழிகளும் குருதிப்புனலால் நிறைந்துவிட்ட நேரம். ஆயுதம் ஏந்திய போராளி திலீபன் அகிம்சைக்கு உண்மையான அர்த்தம் கற்பித்த மகிழ்ச்சியில் தன் விழிகளை இறுக மூடிக்கொண்டான். 'மக்கள்புரட்சி வெடிக்கும்' என்ற உறுதியான நம்பிக்கையை உள்ளத்துள் ஏந்தி உருக்கிக்கொண்டே தன் உயிரைத் துறந்தான்.

1984-ல் அரசியல் பொறுப்பு அவன் கையில் கொடுக்கப்பட்டபோது 21வயது இளைஞனிடம் இந்தப் பாரிய பொறுப்புக்கொடுக்கப்படுகிறதே, சரியான முறையில் எல்லாம் நடைபெறுமா என்ற கேள்வி பலரின் மனங்களில் எழுந்திருக்கும். ஆனால் அந்த இளைஞனோ தன் இதயத்துள் தமிழீழ விடுதலை என்னும் இலட்சியத்தீயை வளர்த்து அதற்கே தன் உடல், பொருள், ஆவி அனைத்தும் என்ற சிந்தனைகொண்டு தன் உடலை வருத்தி உழைக்கத் தொடங்கிய சில நாட்களிலேயே அவனின் பொறுப்புணர்ச்சியை எல்லோரும் மெல்ல மெல்ல விளங்கிக் கொண்டார்கள். எமது தலைவர் சரியான தகுதிகொண்ட ஒருவனிடம்தான் முக்கியமான பொறுப்பை ஒப்படைத்துள்ளார் என்பதை காலப்போக்கில் அனைவரும் புரிந்துகொண்டார்கள். அதிகாலை எழுந்து தன் வேலைகளை ஆரம்பிக்கும் அந்தச்சூரியன் நள்ளிரவு தாண்டினாலும் ஓய்வெடுக்க நினைப்பதில்லை. ஒன்றா இரண்டா அந்த இளம் வீரன் தலையில் சுமத்தப்பட்ட பொறுப்புக்கள்? அவன் பொறுப்பெடுத்த பணிகளில் ஒன்றுதான் மகளிர் அமைப்புப் பணியும். விடுதலைப் போராட்டத்துள் பெண்களின் முழுமையான பங்களிப்பை சமூகம் அங்கீகரிக்க முயல்கின்ற ஆரம்பக்கட்டம் அது.

எப்போது தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதோ அன்றில் இருந்தே விடுதலைப்போராட்ட செயற்பாடுகளில் பெண்களின் உதவி பெற்றுக் கொள்ளப்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் பெண்கள் முழுமையாக விடுதலை இயக்கத்துள் தம்மை ஈடுபடுத்தக்கூடிய சூழ்நிலை உருவாகாத காலமது. விடுதலைப்போராட்டத்துள் தமது முழுப்பங்களிப்பையும் வழங்கலாம் என்ற சிந்தனை ஓட்டம் அன்று பரவலாக பெண்களிடம் இருக்கவில்லை. ஆனால் தம்மால் ஆன உதவிகளைச் செய்ய பல பெண்கள் முன்வந்துகொண்டிருந்தார்கள். அதன் பின்னர்தான் உதவிசெய்ய முன்வந்த அவர்களின் ஆற்றல் புரிந்துகொள்ளப்பட்டு பெண்களின் பங்கும் முழுமையாக விடுதலைப் போராட்டத்துக்கு அளிக்கப்படவேண்டும் என்பதை எல்லோரும் அறிந்துகொள்ளும் நிலை உருவாகிக்கொண்டிருந்தது.

பெண்களை விடுதலைப் போராட்டத்துள் முழுமையாக ஈடுபடுத்தவேண்டும் என்பதில் உறுதியாக இருந்த எமது தலைவரின் வழியை பூரணமாக ஏற்றுக்கொண்டு விடுதலை உணர்வுடன் போராட்டத்தில் ஈடுபட விரும்பிய பெண்களை இனம்கண்டு அந்தக் காலகட்டத்தில் செய்யக்கூடிய இயக்கவேலைகளில் அவர்களை ஈடுபடுத்தினார் எமது மூத்த உறுப்பினர்களில் ஒருவரான கப்டன் பண்டிதர். அவர் வீரமரணம் அடைந்ததைத் தொடர்ந்து பெண்கள் சம்பந்தமான பணி திலீபனிடம் ஒப்படைக்கப்பட்டது. அதுவரை காலமும் விடுதலை உணர்வுடன் செயலாற்ற முன்வந்த பலபெண்கள் தத்தமது பகுதிப் பொறுப்பாளர்களின் இயக்க வேலைகளில் தமது பங்களிப்பை வழங்கிக்கொண்டிருந்தனர். அப்படி உதிரிகளாகச் செயற்பட்ட பெண்களை ஒரு ஒழுங்கமைப்புக்குள் கொண்டுவர முயன்றான் திலீபன். ''இவ்வளவுதான் எம்மால் செய்ய முடியும்'' என்று இருந்த அவர்களை ''ஓர் அமைப்பாக இணைந்து செயற்பட்டால் பெண்களால் முடியாதது என்று எதுவுமே இல்லை'' என்பதைப் புரிந்து கொள்ளும் விதத்தில் பெண்களுக்கான வேலைத் திட்டங்களை முன்வைத்தான். உள உறுதி படைத்தவர்கள் அவனின் ஊக்குவிப்பினால் மேலும் உற்சாகத்துடன் வேலை செய்தனர். தம்மால் பெரிதாக எதுவும் விடுதலைப் போராட்டத்திற்கு ஆற்றமுடியாது என்ற தாழ்வு மனப்பான்மையில் ஊறிப்போயிருந்த பெண்களில் பலர் அதிலிருந்து விடுபட்டு உறுதியுடனும் உணர்வுடனும் விடுதலைப்போராட்டத்துள் தம்மை இணைத்துக் கொள்ள முன்வந்தனர்.

மகளிர் அமைப்பை ஒழுங்கமைத்து ஒரு கட்டுக்கோப்புக்குள் கொண்டுவந்தபின் ஒவ்வொரு பகுதிக்கும் இரண்டு பெண்களை பிரதேசப் பொறுப்பாளர்கள் ஆக்கினான். வாரம் ஒருமுறை அனைத்துப் பிரதேசப் பொறுப்பாளர்களையும் அழைத்து அவர்களின் பிரதேசப் பிரச்சினைகளைப் பற்றிக் கலந்துரையாடி அப்பிரச்சினைகளை அணுகவேண்டிய முறைகளைச் சொல்லித் தருவான். அதனால் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை சீராக, சிறப்பாக செய்ய வேண்டும் என்ற திடம் பெண்களை மேலும் முன்னேற்றகரமான செயற்பாடுகளில் இறங்க வைத்தது. ''எங்களால் செய்ய முடியாது என்று எதுவும் இல்லை'' என்ற தன்னம்பிக்கையை அனைவரிடமும் வளர்த்தது. ''ஆற்றல் இல்லாதவர் என்று ஒருவருமில்லை. அந்த ஆற்றலை வெளிப்படுத்த நாம் முயற்சியில் இறங்க வேண்டும் என்பது தான் உண்மை'' என்பதை அடிக்கடி எமக்கு சொல்லிச் சொல்லி எம்மை மேலும் மேலும் உறுதியுடன் நன்று செயற்பட வழி வகுத்தான்.

சிறிலங்கா அரசின் அடக்குமுறைக்கும் சமூக ஒடுக்குமுறைக்கும் இடையே அகப்பட்டுத் தவித்துக் கொண்டிருக்கும் பெண்ணினத்தின் விடுதலையைப் பெண்களே வென்றெடுக்க வேண்டும் என்பதை பெண்களுக்குப் புரியவைக்க திலீபன் எடுத்துக் கொண்ட முயற்சிகள், ஓயாத உழைப்பு; எதனையும் நினைத்துப் பார்க்காமல் இருக்கும் கணப்பொழுது எமக்குஇல்லை இரண்டு வித அடக்குமுறைக்குள் சிக்கித் திணறிக் கொண்டிருப்பவர்கள் தமிழீழப்பெண்கள். அந்த அடக்குமுறைச் சமூகத்திலிருந்து புறப்பட்டு வரும் பெண்களை ஒழுங்குபடுத்தி ஓர் அமைப்பிற்குள் கொண்டு வரும் பொறுப்பை எடுத்து நடத்தும் அசாத்தியத்துணிவும், பிரச்சினைகளை சரியான முறையில் அணுகும் நுட்பத்திறனும் இருக்கவேண்டும். அந்தத் திறமைகள் திலீபனிடம் அமைந்திருந்ததைப் புரிந்து கொண்டுதான் எமது தலைவர் அவனிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்தார் என்பதை அவனின் செயற்பாடுகள் காலப்போக்கில் புரிய வைத்துக் கொண்டிருந்தன.

அவனின் இறுதித் துடிப்பு அடங்கும் வரை அவனின் நினைப்பிற்குள் நிமிர்ந்து நின்றது மகளிர் விடுதலையை உள்ளடக்கிய மக்கள்விடுதலைதான். விடுதலைப் புலி ஒருவனின் உள உறுதியையும் விடுதலைக்காக எதனையும் தியாகம் செய்ய ஒரு புலி வீரனால் முடியும் என்ற தெளிவான உண்மையையும் உலகிற்குப் புரியவைக்க நீர் கூட அருந்தாது உண்ணாவிரதம் இருக்கச் செல்லுமுன் அவன் எங்கள் எல்லோருக்குமே சொன்ன வார்த்தை 'எங்கள் தலைவரின் வழியில் திடமான நம்பிக்கையுடன் செல்லுங்கள்



சுதந்திர தாகம்
சுடர் விடத் தூக்கம்...




# ன்

## ச்சியின்

தமிழீழம் நிச்சயம் மலரும்' என்பது தான்.

ஆயுதப் போராளியான அவன் ஆயுதத்தில் நம்பிக்கை இழந்து அகிம்சை வழியில் இறங்கவில்லை. அகிம்சை வழியை போதித்தபடி எமது தாயகத்தை ஆக்கிரமிக்க வந்த இந்திய அரசின் வஞ்சக நோக்கை தமிழீழ மக்களுக்கும், இந்திய மக்களுக்கும் புரியவைக்க வேண்டும் என்று அதன்மூலம் எமது மக்களை மேலும் புரட்சியை நோக்கி அணிதிரட்ட முடியும் என்று நம்பினான். மேலும் எல்லோரும் விடுதலை உணர்வுடன் ஆயுதப் போராட்டத்தில் இறங்கினால் மட்டும்தான் எமது விடுதலையை எம்மால் வென்றெடுக்க முடியும்; என்ற தெளிவான உண்மையை மக்களுக்குப் புரிய வைக்க வேண்



கம்
தூக்கம்...

டும்'' என்று தான் தண்ணீர் கூடப் பருகாது அணு அணுவாகத் தன்னை வதைத்து வருத்தி மரணத்துள் தன்னை ஆட்படுத்திக் கொண்டான்.

அவனின் தியாக மரணம் எங்கள் மக்களுள் ஓர் எரிமலையைத் தோற்றுவித்து விட்டது. பார்வைமங்கி உணர்விழந்து உயிர் மெல்ல மெல்லப் போய்க் கொண்டிருக்கும் போது கூட மக்கள் எல்லோரும் விழித்துக் கொண்டு விட்டார்களா? மக்கள் புரட்சி வெடிக்குமா? என்ற கேள்விதான் அந்த விடுதலை வேங்கையின் நினைவை நிறைத்துக் கொண்டிருந்தது. அவனின் அந்த எதிர்பார்ப்பு நிறைவேறுவது மக்களின் கைகளிலே தான் தங்கியுள்ளது.

நாளும் நாளும் விடுதலைக்காக தம்முயிரை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் எமது போராளிகளினதும் இந்திய வல்லரசின் சுயரூபத்தை எமது மக்களுக்கும், உலகிற்கும் தெரிய வைக்க தன்னை அணு அணுவாகவதைத்து அழித்துக் கொண்ட திலீபனினதும் எங்களினதும் இறுதியும் உறுதியுமான இலட்சியம் சுதந்திர தமிழீழம் தான். அந்த எல்லையை எட்டும் வரை எமது போராட்டம் தொடரும்.

விடுதலைப் புலிகள்
மகளிர் முன்னணி

# மகிமை மிகு மண்ணின் மைந்தனே...

மகனே!
இந்த மண்ணிற்கு
மகிமை தந்தவர்களில் மகத்துவம் பெற்றவன் நீ!
இதோ பார் மகனே!
உன்னைத் தாங்கி சுமந்த மண்
அந்நியப்படுத்தப் பட்டுக் கிடக்கிறது!
வல்லரசுகளெல்லாம்
பிணங்களைத்தான் விசாரிக்கின்றன!
கழுகுகளும் சாத்தான்களும்
கூடிப் பேசுகின்றன!
அவ்வப்போது
ஓநாய்களும் கண்ணீர் வடிக்கின்றன!
நீயோ எமதுமண்ணின் ஒரு துகளேனும்
அந்நியன் காலில் விழுவதை எதிர்த்து
உன் தலையைக் கொடுத்து,
இந்தியாவைப் புரிய வைத்துவிட்டாய்!
அவர்கள்
அகிம்சையின் ஈமைக்கிரியைகளில்
சமாதானம் செபிப்பவர்கள்!
அங்கே - தியாகிகளின் தகனங்களில்தான்
பதவித்தாகம் தீர்க்கப்படுகிறது!
இப்போது பார் மகனே!
மயில்களின் தோகை அரிந்து
பேய்களுக்குச் சூட்டிப் பார்க்கிறார்கள்!
இவர்களையா நம்பினோம்.
பார்மகனே! இந்தமண்ணில்தான் நீயும்!
தன் தாயை, தங்கையை
செடுத்தவனுக்கு - தன்
சகோதரனைக் காட்டிக் கொடுக்கும் பாவியும்
இந்த மண்ணில்தான்!
அது எப்படி மகனே எப்படி?
நீ துளித்துளியாக அருந்திய துன்பம்
இந்தப் பாவிகளை மன்னிக்குமா?
இந்த மண்ணின் அசல் வித்துக்கள்
துப்பாக்கிகளை பூத்திருக்கின்றன.
அவை — பாவங்களை அல்ல
பாவிகளையே சுட்டெரிக்கும்!
இதோபார் மகனே!
நீ சுமந்த
இந்த மண் சுமக்கும்
வேதனைச் சிலுவை
இனியாரை மன்னிக்கக் கூடும்?
ஆ... பார் -
இந்தப் பூமியையே
ஒரு நாள் பிளக்க வைக்கும்!

'சஞ்சயன்'

# திலீபன் கிடைப்பானா?


விடுதலை வேள்வியில் விடி வெள்ளியொன்று
விண்ணென உதித்தது ஈழமதில்
விடு-தலை என்ற ராணுவத்தை
விரட்டியடித்த வேங்கையிவன்
ஒருதலைப்பட்ச நடவடிக்கையினை
ஓதிவந்த இந்தியனின்
கெடுதலையுணர்த்திய பெருவீரன்
கேர்ணல் திலீபன் கேளீரே!

தியாகச் செம்மல் திலீபனவன்
திறமை சரித்திரம் படைத்ததுவே
தகாத கொடுஞ்செயல் தலைதூக்க
தவித்து நின்றோம் தமிழர் யாம்
நியாய இலக்குக் கடலொன்றில்
நீந்தி வந்த திலீபனவன்
அடிமை மக்கள் அமைதிக்காய்
அழித்தான் தன்னை நோன்பாலே!


மெழுகுவர்த்தி தனும்கூட
மீதம் தன்னில் வைத்துவிடும்
அழகு மிகுந்த அரும் வீரன்
அனைத்தும் ஈந்தான் தமிழுக்காய்
அளவில் பெரிய ஊர்வலங்கள்
அன்றியும் மறியல், கூட்டங்கள்
ஒழுங்கு செய்து வென்றவனே
ஒப்பில்லாத் திலீப மாமணியே!

சாவை வென்ற சாத்வீகன்
சாதனை படைத்த பார்த்தீபன்
ஆவிபிரியும் வேளையிலும்
ஆத்மா அழுதது விடிவுக்காய்
தாவி வருவோம் உன்பின்னால்
தணியா சுதந்திர தாகத்துடன்
கேவிக்கேவி அழுதிடினும்
கேர்ணல் திலீபன் கிடைப்பானா?


- நா. கமலவதனி




தலைமகன் துயில்கையில்
தாயகம் விழித்தது...



தந்தைமகற் காற்றும் உதவி
அவையத்து முந்தியிருக்கசெயல்



சிரம் தாழ்த்தி நிற்கும்
சிங்களத் தலைவர்...



தேருர்ந்து வருகின்றான்
தெய்வமகன் பாரீரோ .

## காணவில்லை

திருக்கோணமலை சோலையடி உப்புவெளியைச் சேர்ந்த செல்லையா (பழனியாண்டி) ஐந்தவன் என் பவர் 13-06-90 அன்று அங்கிருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ளார் என அறிந்தோம். இவர் இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியராவார். எங்கிருந்தாலும் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

செ. வசந்தகுமார்
C/o. P. கிருஷ்ணமூர்த்தி
இலங்கைநாயகி அம்மன் கோயில்,
கல்வியங்காடு,
நல்லூர்.

தகவல்:
செ. வசந்தகுமார்
(அண்ணன்)

(R-660)

## 3ஆம் ஆண்டு நினைவு நாள்

உண்ணா நோன்பு ஆரம்பம்
15
09
1987



தியாக மரணம்
26
09
1987


### தியாகி லெப். கேணல் திலீபன்

உண்ணாவிரதத்திற்கு புதிய வரைவிலக்கணம்
படைத்த வீரவேங்கையே!
உண்ணாவிரதத்தால் உலகினையே அதிரவைத்த
உத்தம தியாகச் சுடரே!

உமக்கு எமது இதய பூர்வமான
வீரவணக்கங்கள்

தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம்
அச்சுவேலி.

(R-659)




### திலீபன்

27 - 10 - 1963
26 - 9 - 1987

### அக்காச்சி

3 - 2 - 1963
15 - 9 - 1989



இராசையா பார்த்திபன்-ஊரெழு

எங்கள் மண்ணில்
பிறந்த சூரியன்
அவன் பெயர்
திலீபன்!

வீரம்
வெறும் வார்த்தை அல்ல
வடிவம்...
அதன் உருவம்
திலீபன்!

திலீபன் - இவன்
தமிழ்த் தாயின்
செல்ல மகன்

இவனின் உடல்
அடிவேர்களுக்கு
உரமாகிப் போனதால்
எங்கள்
விடுதலை விருட்சம்
இன்னும்
விண்ணுயர்ந்து நிற்கிறது

இவன் மறையாத சூரியனாய்
எமக்குள்ளிருந்தான்
புலிப்படை வளர
அவன் பணி செய்தான்

நாங்கள்
தொலைத்து நின்ற
தேசமண்ணை
தேடிக் கண்டு பிடிக்க
தோன்றிய கர்த்தா.

சிவகுருநாதன் ஸ்ரீகாந்தன்
நீர்வேலி

இன்று
நீ இல்லாத வெறுமையில்
எங்கள் தெருக்களும்...
ஈழ மண்ணும்...
நாங்களும்...

இன்றைய வரலாறுகளில்
உன் சாவு
ஒரு சரித்திரம்

நீ வெறுமனே மரணத்தில்
வீழ்ந்து போனவன் அல்ல
வீர மறவனாய்
வாழ்ந்து மடிந்தவன்

நீ களத்தில்
வெற்றிகளைப் பெற்றதைவிட
உன் சிரிப்பால்
பலஇதயங்களை வென்றதே அதிகம்

நீ சிரிக்கத் தெரிந்த
ஒரு சூரியப்பூ
சாவில் கூட
உன் முகத்தில்
சந்தோஷச் சிரிப்பு!

மரணித்த வீரனே
தமிழ் மண்ணிருக்கும் வரை
எம் மனதில்
உன் இனிய நினைவிருக்கும்.

ஊரெழு வாழ் மக்கள்

(B/ 1423)

# தியாகி திலீபனின்
# மூன்றாவது ஆண்டு நினைவாக...



“எங்கள் மக்களைக் காத்திட ஆயுதம்
ஏந்துவேன் நான் மீளவும்!” என்னும்உன்
சங்க நாதம் செவிகளில் கேட்குதே!
சாவுனக்கில்லை, தம்பி திலீபனே!

தாயகத்தினை மீட்கும் முரசெலாம்
தம்பி உன்பெயர் சொல்லி முழங்குமாம்!
ஞாயிறாய் ஒளிவீசு! ஈழமாமணியே - நீ
நாட்டின் வெற்றிக் கொடியினில் நில்லடா!

- பருத்தித்துறை வட்ட அவை

B1401

## சிந்தனைக்கு

உயர்ந்த இலட்சியத்திற்காக உயிர்துறப்போர் ஒரு நாளும் தோற்பதில்லை.

– பைபன் பிரபு

ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம். 26-09-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 · நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# திலீபனின் இலட்சிய வழியில் தொடர்வோம்

திலீபன்!

அவன் தமிழீழத்தின் தியாக தீபமாகி 3 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. ஈழத்தமிழர்களுக்காக, அவர்களின் நலன்களைப் பேணுவதற்காக, சாகும்வரை உண்ணாவிரதமிருந்து அவன் மரணித்துவிட்டான். உலகில் பலர் உண்ணாவிரதமிருந்து உயிர் துறந்திருக்கிறார்கள். ஆனால், உண்ணாவிரதப் போராட்டத்துக்கே புது வடிவங்கொடுத்து உயிரூட்டியவன் திலீபன்.

13 07-1929 இல்,பகத்சிங்கின் தோழரான வங்கத்தைச் சேர்ந்த ஜதீந்திரநாத் தாஸ், லாகூர் சிறையில், சிறைக் கொடுமைகளை எதிர்த்து உண்ணாவிரதமிருந்து 13-09-1929 அன்று, 63 ஆவது நாள் வீரமரணமடைந்தார்.

1953 அக்டோபரில், மொழிவழியிலாக ஆந்திர மாநிலத்தைப் பிரிக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து ஆந்திராவைச் சேர்ந்த பொட்டி சிராமலு 58 நாட்கள் உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்தார்.

1956 ஆகஸ்ட் 27 இல், சென்னை மாகாணத்துக்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டக்கோரி உண்ணாவிரதத்தை ஆரம்பித்த 63 வயதான விருதுநகர் சங்கரலிங்க நாடார் 78 ஆவது நாள் அவரது கோரிக்கை ஏற்றுக்கொள்ளப் படாமலேயே உயிர்துறந்தார்.

1981இல் பிரிட்டிஷ் சிறையில்உள்ளஐரிஷ்போராளிகள் அரசியல் கைதிகளாக மதிக்கப்படவேண்டும், நடத்தப்பட வேண்டும் எனக் கோரி ஐரிஷ் வீரர்களான பொபிசாண்ட்ஸும், அவரது தோழர்கள் இருவரும் சிறையில் 62 நாட்களுக்குமேல் உண்ணாவிரதமிருந்து உயிர்துறந்தனர். 1988 இல், திலீபனுக்குப் பின்னர், அன்னை பூபதி அவர்கள் ஈழத் தமிழர்களுக்காக மட்டக்களப்பில், 31 நாள் உண்ணாவிரதமிருந்து உயிர்த்தியாகம் செய்தார்.

இவை தவிர, சங்ககாலத்தில் தமிழ் மன்னர்கள் பலர் பதவியைத் துறந்த பின்னர், வடக்கிருந்து உணவருந்தாது உயிர் துறந்திருக்கின்றனர்.

இவர்களெல்லாம் உணவருந்தாமல் நீரை அருந்திக் கொண்டுதான் உண்ணாநோன்பிருந்தார்கள். இவர்களை விட வயதில் குறைந்த திலீபன் தனது 23ஆவது வயதில், நீரைக்கூட அருந்தாது 12 நாட்கள் உண்ணாநோன்பிருந்து, அந்த உண்ணாவிரதப் போராட்டத்துக்கே உயிரூட்டினான்; எமது விடுதலைப் போராட்டத்துக்கு ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தினான்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் லெப்டினன்ட் கேர்ணலான திலீபனது மரணம் இலட்சக்கணக்கான மக்களை எழுச்சிகொள்ளவைத்தது.

உயர்கல்வி கற்கக் கிடைத்த வாய்ப்பை உதறித்தள்ளி விட்டு போராட்டக்களத்தில் இறங்கியவன் திலீபன்.

இயக்கத்தில் இணைந்த பின், பல செயற்கரிய சாதனைகளைப் புரிந்தவன் திலீபன்.

தமிழீழ மக்களுக்கும் – விடுதலைப் புலிகளுக்கும் இணைப்புப் பாலமாகத் திகழ்ந்தவன் திலீபன்.

யாழ்ப்பாணத்தில் அரசியற் கூட்டங்களுக்கு இலட்சக் கணக்கான மக்களை முதன்முதலாக அணிதிரட்டியவன் திலீபன்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கான பேச்சில், எழுத்தில், போராட்டக்களத்தில் எல்லாம் தன் தனி முத்திரையைப் பதித்தவன் திலீபன்.

இறுதியாக, புத்தன் பிறந்து, காந்தி பிறந்து அகிம்சையைப் போதித்த பாரதத்துக்கே அகிம்சை என்றால் என்னவென்று அறியவைத்தவன் திலீபன்.

அவன் உண்ணாவிரதப் போராட்டத்தின்போது விடுத்த 5கோரிக்கைகளில் பல இன்று நிறைவேற்ற முடியாதவையாக, நிறைவேற்றத் தேவையில்லாதவையாக ஆகிவிட்டன. ஆனால், தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்களக் குடியேற்றங்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்ற தலையாய கோரிக்கைதான். திலீபன் செத்தும் சாகாத கோரிக்கையாக, இன்றும் என்றும் தமிழ் மக்களின் உயிர்மூச்சான கொள்கையாக, கோரிக்கையாக இருந்துகொண்டிருக்கிறது. திலீபன் மேற்கொண்ட தமிழீழ மண்ணைக் காக்கும் போரினைத்தான் ஆயிரமாயிரம் விடுதலைப்புலி வீரர்கள் தொடர்ந்தும் தீவிரமாக நடத்திக்கொண்டிருக்கின்றனர்.

யாழ். கோட்டை தமிழரின் அடிமைச் சின்னமென்றும் அங்கு நிலை கொண்டுள்ள அந்நிய சக்திகளை, ஆக்கிரமிப்பு சக்திகளை அகற்றி அங்கு புலிக்கொடியைப் பறக்கவிடவேண்டும் என்ற திலீபனின் நீண்டநாள் விருப்பை, வேணவாவை நிறைவேற்றும் முயற்சியில் நூற்றுக்கும் அதிகமான எமது வீரர்கள் களபலியாகிவிட்ட போதிலும், தொடர்ந்தும் அந்த முயற்சியில் எமது வீரர்கள் முனைப்பாக ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர்.

தமிழீழ மக்களுக்காக திலீபன் மேற்கொண்ட போராட்டங்கள், எண்ணிய எண்ணங்கள், கூறிய கருத்துக்கள், புரிந்த தியாகங்கள் எல்லாம் இன்று, புதிய போராளிகளுக்கு வழிகாட்டுவனவாக உள்ளன. யாழ். கோட்டை முன்றலிலும், உரும்பராயிலும் அவன் ஆற்றிய வீர உரைகள் இன்றும் எம் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

# பொருளாதார நடைமுறைபற்றி சோவியத்தில் இழுபறி

சோவியத் பாராளுமன்றத்தில் புதிய சந்தைச் சீரமைப்பு முறை பற்றிய விவாதம் இடம் பெற்றது. நலிந்து வரும் சோவியத் பொருளாதாரத்தைச் சீரமைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட சந்தைப் பொருளாதாரமுறை ஒப்புக்கொள்ளப்பட்ட போதும் அதை எப்படி நடைமுறைப்படுத்துவது என்பது குறித்து இழுபறி நிலை காணப்படுகிறது,

அரசுத் தலைவர் போரிஸ் யெட்சின் அவர்கள் விரும்புவதுபோல விரைவான முறையிலான திட்டத்தையா அல்லது பிரதமர் நிக்கொலய் ரிஸ்கோ விரும்புவது போன்ற பாதகமான எச்சரிக்கையுடன் கூடிய திட்டத்தையா அமுலாக்குவது என்பது பற்றித் தீர்மானிப்பதில் சில இடர்பாடுகள் எதிர்நோக்கப்படுகின்றன.

இந்த இரண்டு வகைத்திட்டங்களும் இணங்கிய ஒரு பொதுப்படையான திட்டத்தை 3 வார காலத்தில் கொண்டு வரும்படி பாராளுமன்ற உறுப்பினர்கள் கொர்பசேவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

புதிய புரட்சித் திட்டத்தை வகுத்தவரான ஸ்ரனிஸ்லோ ஷட்டர்லி தமது திட்டத்துக்கும் மாற்றுத் திட்டமொன்றுக்கும் இடையே எந்தவகைச் சமரசத்துக்கும் இடமில்லை என்று தெரிவித்துள்ளார்-இந்நிலையானது கொர்ப்பசேவ் அவர்களின் பொறுப்பை மேலும் அதிகரித்துள்ளது என பி. பி. சி. தெரிவித்தது.

## ஈராக் மீதான விமானத்தடை, அமைச்சர்கள் மாநாடு

(நியூயோர்க்)

ஈராக் மீதான விமான போக்குவரத்துத் தடையை மேலும் வலுப்படுத்துவது பற்றி ஆராயும் பொருட்டு சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வேட் செவர்னாட்சே தலைமையில் பதினைந்து நாடுகளின வெளியுறவு அமைச்சர்கள் கலந்து கொள்ளும் மாநாடு ஒன்று நியூயோர்கில் நடைபெற உள்ளது.

இந்த மாநாட்டில் குவைத் மற்றும் ஈராக் ஆகிய இரு நாடுகளின் மீதும் ஒற்றுமையுடன் விமானத்தடை நடவடிக்கைகளை வலுப்படுத்துவது பற்றி தீர்மானங்கள் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக மேற்கத்தேய செய்தி ஏஜென்சிகள் தெரிவிக்கின்றன.

## பெனாசிர் பூட்டோ மீது புதிய குற்றச்சாட்டுக்கள்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோவுக்கு எதிராகப் புதிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இஸ்லாமாபாத்தில் விலைமதிப்பு மிக்க நிலத்தை லண்டனின் ஒரு நிறுவனத்துக்கு ஐந்து நட்சத்திர ஹோட்டல் அமைப்பதற்கு விற்பனை செய்ததாக ஒரு வழக்கும்-

பெற்றோலிய எரிவாயுவை விநியோகிக்கும் உரிமையை வழங்கியது தொடர்பாக ஒரு வழக்கும் இவருக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ளன.

பெனாசிர் பூட்டோ சிறப்பு நீதி மன்றத்தின் முன்னர் தோன்ற வேண்டும் என அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. இவர் அதிகார துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறி விடுக்கப்படும் இரண்டாவது அழைப்பாணை இதுவாகும்.

சிறப்பு நீதி மன்றத்தீர்ப்புகள் செல்லுபடியாகாது எனத் தாம் எதிர்வழக்காட இருப்பதாகவும் பெனாசிரின் வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

பெனாசிர் பூட்டோவை மீண்டும் பதவிக்கு வரவிடாது தடுப்பதற்காகவே இத்தகைய களங்கம் கற்பிக்கப்படுவதாக அவரது ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர் என பி.பி.சி. கூறியது.

## பூஜையும் கூட்டுப் பிரார்த்தனையும்

(அரியாலை)

தமிழீழ மக்களுக்காக உண்ணாவிரதமருந்து உயிர் நீத்த தியாகி திலீபனின் ஆத்ம சாந்திக்காகவும், தமிழீழ விடுதலைப் புலிகளின் வெற்றிக்காகவும் இறைவனை வேண்டி அரியாலை மத்தி சித்தி விநாயகர் கோயிலில் இன்றுகாலை 9.00 மணிக்கு அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து பூசையும் கூட்டுப் பிரார்த்தனையும் உண்ணாவிரதமும் இடம் பெற உள்ளன. இதில் அரியாலைப் பிரதேசப் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைக்கின்றனர்.

## மரக்கன்றுகள் இலவச விநியோகம்

(கொழும்புத்துறை)

நம்நாட்டில் மழை வளம் பெருக்கிட நவராத்திரி காலத்தில் எமது பகுதி மண்ணில் மரங்களைப் பெருமளவில் நாட்டி வந்துள்ள வழக்கத்தை வழமை போல் இவ்வாண்டும் தொடர்வதற்கு உதவியாக நேரில் வருவோர்க்கு நாட்டுத் தேக்கங்கன்றுகள் இலவசமாக மில்க்வைற் நிறுவனத்தால் வழங்கப்பட்டு வருகின்றது.

இப்பெரும் பணியை மில்க்வைற் தொழிலக அதிபர் சிவதர்மவள்ளல் திரு. க. கனகராசா, மேற்கொண்டு வருகின்றார். (24)

## ஊர்காவற்படையினர் இருவர் பலி; ஆயுதங்கள் மீட்பு

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டதில் உள்ள புதுக்காவே என்ற இடத்தில் சிங்கள ஊர்காவல் படையினர் மீது விடுதலைப்புலிகள் கடந்த சனிக்கிழமை தாக்குதல் நடத்தினர். இத் தாக்குதலில் இரு ஊர்காவற்படையினர் கொல்லப்பட்டனர் அவர்களிடமிருந்து சில ஆயுதங்களை கைப்பற்றி உள்ளனர். 2 சொட்கண், அவற்றிற்குரிய தோட்டாக்கள் என்பவையே கைப்பற்றிய ஆயுதங்களாகும். (க)

## ஆயித்தியமலையில் நான்கு தமிழர் கைது

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயித்தியமலை என்ற பகுதியை சிறிலங்கா படையினர் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தி உள்ளனர்.

வீடுவீடாக தேடுதல் நடத்திய இவர்கள் அங்கிருந்த நான்கு தமிழர்களைக் கைது செய்து தம்முடன் அழைத்துச் சென்றனர். இவர்கள் தற்போது எங்கு உள்ளனர் என்பது பற்றிய விபரம் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. (க)

யாழ். இந்துக் கல்லூரியின் சிறந்த மாணவனாக இருந்து தனக்குக் கிடைத்த உயர்கல்வி வாய்ப்பை, மருத்துவத்துறைப் படிப்பை உதறித்தள்ளிவிட்டு, உயர் கல்வியைவிட சுதந்திரம்தான் முதலில் தேவை என்பதை, உணர்ந்துதான், திலீபன் இயக்கத்திலிணைந்து களம் புகுந்தான்.

அடிமைவாழ்வு வாழ்ந்துகொண்டு தான் பெறும் கல்வியென்பது 'கண்ணிரண்டையும் விற்றுச் சித்திரம் வாங்குவதற்கொப்பானது' என்பதைப் புரிந்துகொண்டு, இயக்கத்திலிணைந்து அயராது உழைத்து, உயிரையும் ஈந்தான் திலீபன். இன்று அவன் சரித்திரத்தில் இடம் பெற்று சாகாவரம் பெற்றுவிட்டான். அவன் காட்டிய வழியில் இளைஞர்கள் அனைவரும் தமிழ் மக்களின் இழந்துவிட்ட இறைமையை, சுதந்திரத்தை மீட்க களத்தில் இறங்கவேண்டும்.

இனத்துக்காக அன்றி தங்களது எதிர்கால வாழ்வை உறுதிப்படுத்திக் கொள்வதற்குக்கூட திலீபன் காட்டிய பாதைதான் ஒரே வழி! நேரான வழி!!

## அராலித்துறையில் சைக்கிள் திருட்டு

(புங்குடுதீவு)

அண்மையில் அராலித்துறையில் றலி சைக்கிள் ஒன்று களவாடப்பட்டுள்ளது.

நவாலியைச் சேர்ந்த மரக்கறிவியாபாரியானதேவகுமார் என்பவர் புங்குடுதீவில் வியாபாரம் செய்வதற்காக மரக்கறி ஏற்றிக்கொண்டு சைக்கிளில் அராலித்துறைக்குவந்து சேவையில் ஈடுபடும் வள்ளக்காரருடன் பேரம் பேசிக்கொண்டிருந்த போது இவரது சைக்கிள் களவாடப்பட்டது. இதனால் பலத்த சிரமங்களின் பின் இவர் தமது மரக்கறிகளை எடுத்து வர வேண்டி ஏற்பட்டது.

இரவு நேரம் பிரயாணம் செய்யும் தீவுப்பகுதி மக்களிடம் அராலித்துறையில்முடிச்சுமாறிகள் தமது கைவரிசையைக் காட்டிவருவதும், கடந்த சில நாட்களாக இவை அதிகரித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. ( 22

# சிறிலங்கா ஆயுதப்படை ஒக்டோபரில் ஒருலட். இருபதாயிரத்தை தாண்டும்

(கொழும்பு)

இவ்வாண்டு ஒக்டோபர் மாதமளவில் சிறிலங்காவில் உள்ள ஆயுதம் தரித்த படையினரின் தொகை 1, 20, 000 பேரைத் தாண்டிவிடும் எனத் தெரியவருகிறது.

லலித் அத்துலத்முதலி 1984 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பதவிஏற்றபோது இராணுவத்தில் 11,000 பேரும், கடற்படை, விமானப் படையில் 4,500 பேரும், பொலிஸில் 14,500 பேருமாக மொத்தம் 31,000 பேர் ஆயுததாரிகளாக இருந்தனர்.

தற்பொழுது இராணுவத்தில் 46,000 பேரும், கடற்படை, விமானப்படை, கொமாண்டோஸ் என்பன இணைந்து 14,000 பேரும், விசேஷ அதிரடிப்படை (எஸ் ரி. எவ்.) உட்பட பொலிசார் 40,000 பேரும், ஊர் காவற்படை 15,000 பேரும், முன்னணிப் படை 5,000 பேருமாக மொத்தம் 1, 20, 000 ஆயுததாரிகளை சிறிலங்கா அரசு உருவாக்கியுள்ளது. இப்புள்ளி விபரம் அரசின் உத்தியோக பூர்வ புள்ளிவிபரமாகும்.

## இன்று தியாகி திலீபனின் மூன்றாமாண்டு நினைவு நாள்

தியாகி திலீபனின் மூன்றாம் ஆண்டுநினைவுதினமான இன்று வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பல இடங்களில் நினைவஞ்சலிக் கூட்டங்களும், கருத்தரங்குகளும், அடையாள உண்ணாவிரதங்களும் ஊர்திபவனிகளும் இடம் பெறுகின்றன.

தியாகி திலீபனின் நினைவஞ்சலிக் கூட்டங்கள் சில;

சண்டிலிப்பாய் ராஜா பாடசாலை மண்டபத்தில் தியாகி திலீபனின் அஞ்சலிக் கூட்டம் இன்று பி. ப. 4 மணியளவில் நடைபெறும் கூட்ட முடிவில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

ஊரெழுவிலும் தியாகி திலீபனின் அஞ்சலிக் கூட்டம் இன்று மாலை 4 மணியளவில் நடைபெறும்,

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் இன்று பி. ப. 4 மணிக்கு தியாகி திலீபனின் அஞ்சலிக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

மீசாலையிலும் மாவடிப் பிள்ளையார் ஆலய முன்றலில் அடையாள உண்ணாவிரதமும் அதைத் தொடர்ந்து தியாகி திலீபனின் அஞ்சலிக் கூட்டமும் இடம்பெறவுள்ளது.

## இளைஞர் தற்கொலை

(மானிப்பாய்)

கட்டுடையில் நேற்று இளைஞர் ஒருவர் நஞ்சு அருந்தி தற்கொலை செய்துள்ளார்.

குடும்பத்தகராறு காரணமாகவே வீட்டில் இருந்த தமரோன் என்றகிருமிநாசினியை அருந்தியுள்ளார். திருக்கோணமலையைச் சேர்ந்த ஏகாம்பரநாதன் (வயது 28) என்றஇவர் திருக்கோணமலையில் இருந்து அகதியாக வந்து இப்பகுதியில் திருமணம் செய்தவர் ஆவார். (க)

## தபால் நிலையம் இயங்குகிறது தபால் விநியோகம் இல்லை

(வவுனியா)

வவுனியாவில் தபால் நிலையம் இயங்கத்தொடங்கிவிட்டபோதிலும் தபால்விநியோகம் நடைபெறவில்லை

வவுனியா கச்சேரியின் கட்டடப் பகுதியொன்றில் புதிதாகத் தபால் நிலையம் செயல்படத் தொடங்கியுள்ளது.

வவுனியா வரையிலானயாழ்தேவி சேவை ஆரம்பிக்கப்பட்டதன் பின்பே கொழும்பிலிருந்து உள்நாட்டு, வெளிநாட்டு தபால் பொதிகள் கொண்டுவரப்படும் என்றும் தற்போது முத்திரை விநியோகம் மட்டுமே தபால் நிலையத்தில் இடம் பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம், தபாலக ஊழியர் பற்றாக் குறை நிலவுவதால் உள்ளூர் தபால் விநியோகம் கூட செய்ய முடியாமல் இருப்பதாகவும் கூறப்பட்டது. (தி)

### ஐ. நா. தடையை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எழுப்பினர்.

அதேவேளை ஈராக்கின் விளை நிலங்களில் 80 வீதத்திற்கு கோதுமை பயிரிடப் போவதாக ஈராக் அரசாங்கம் அறிவித்துள்ளது.

### திலீபன்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அளவு பொதுமக்கள் கரைபுரண்டனர். இதுமட்டுமன்றி காரைநகர் கடற்படை முகாமிற்கு மிக அண்மையில் இருக்கும் வியாவில் சைவ வித்தியாலயத்தில் ஏராளமான பொதுமக்கள் கூடி தியாகி திலீடனுக்கு அஞ்சலி செலுத்தினர்,

இதுதவிர யாழ். குடாநாட்டுக்குள் தெருக்கள் தோறும் நினைவுப் பந்தல்களும், எழுச்சிக்கீத இசையும் ஒலிபரப்பப்பட்டு நீராகாரம் கூட அருந்தாது தமிழீழ மண்ணின் விடிவுக்காக உயிர் நீத்த தியாகி திலீபனுக்குக் குடாநாட்டு மக்கள் அஞ்சலி செலுத்திவருகின்றனர்.

**வடமராட்சி**

வடமராட்சிப் பகுதியில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை உட்பட நெல்லியடி. தாளையடி, அச்சுவேலி போன்ற ஊர்களில் திலீபனின் மூன்றாம் ஆண்டு நினைவாக நினைவுப் பேருரைகளும், ஆலய பூசைகளும், அன்னதானமும் இடம்பெற்றுவருகின்றன. இந்த நிகழ்ச்சிகளில் பெரும்பாலானவற்றை அந்த அந்த பிரதேச சிற்றூரவை, வட்ட அவைகள் முன்னின்று நடத்திவருகின்றன.

**வலிகாமம்**

தியாகி திலீபனுக்கு வலிகாமம் பகுதியில் பெருமெடுப்பிலான ஊர்தி பவனிகளும் நினைவுப் பந்தல்களும் இம்முறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. கடந்த இரண்டு வருடமும் இந்திய இராணுவமும் தேச விரோதக் கும்பல்களும் இத்தகைய நிகழ்ச்சிகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருந்தன. ஆனால் இம்முறை பொதுமக்கள் தாமாகமுன் வந்து இந்த நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளனர்.

சுதுமலை அம்மன் கோயிலுக்கு ஏராளமான மக்கள் நேற்றுவந்து திலீபனின் நினைவாகஉண்ணாவிரதமிருந்தனர் இவ்வாலயத்தை அண்டிய பகுதிகளான மானிப்பாய், உடுவில், சங்குவேலி ஆகிய பகுதிகளில் இருந்து மக்கள் ஊர்வலமாக ஊர்திகளுடன் சென்று தமது அஞ்சலிகளை செலுத்தி உள்ளனர்.

சித்தன்கேணி மகாகணபதி பிள்ளையார் ஆலயத்தில் சுளிபுரம், தொல்புரம், மூளாய் ஆகிய சிற்றூரவைகள் இணைந்து வழிபாடும், அடையாள உண்ணாவிரதமும்இருந்தனர்.

கல்வியங்காடு சந்தையில் இன்று காலை ஒன்பதுமணியிலிருந்து நான்கு மணிவரை அடையாள உண்ணாவிரதமும், மாலை தியாகதீபம் நினைவுதூபி திறப்புவிழாவும் பொதுக்கூட்டமும்இடம்பெறவுள்ளது.

**தென்மராட்சி**

தென்மராட்சிப் பகுதியில் அனைத்து ஆலயங்களிலும் இன்று காலை பத்துநாற்பத்தெட்டு மணியளவில் மணியோசைஎழுப்பப்பட்டு விசேட பூசைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சிமூன்று ஆண்டுகளுக்கு முன்பு இதே நாள் இதேநேரம் தியாகிதிலீபனின் உயிர்நீத்ததை ஒட்டி இடம்பெறுகின்றது. நேற்று முன்தினம் புத்தூர் சந்தியில் திலீபனின் நினைவாக ஒருபஸ் நிலையம் திறந்துவைக்கப்பட்டது. இன்று கைதடியில் ஓர் நினைவுதூபிதிறக்கப்பட உள்ளது. ஜும்மா பள்ளிவாசலிலும் விசேட வழிபாடுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு இன்று யாழ் குடாநாடே எங்கும் திலீபனின் எழுச்சியையே காணக்கூடியதாக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## மரண அறிவித்தல்

### திரு. சுந்தரம்பிள்ளை சுப்பிரமணியம்

வேலணையைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்டு வாழ்ந்த திரு. சுந்தரம் பிள்ளை சுப்பிரமணியம் 25- 9- 90 இல்காலமானார்.


அன்னார் காலம் சென்ற சுப்பிரமணியம் தங்கம்மாவின் அன்புக் கணவரும், காலம் சென்ற சு. செல்லத்துரை, சு. இராசரத்தினம் (பதிவாளர்), க. பாக்கியலக்சுமி சு. சீவரத்தினம் (இளைப்பாறிய அதிபர்), ஆகியோரின் அன்புச்சகோதரரும், திருமதி ஆ. புனிதவதி (இளைப்பாறிய ஆசிரியை), திருமதி தி. திலகவதி, காலம் சென்ற திரு. சு. சண்முகநாதன் (கல்வி அதிகாரி வேலணை), செல்வி. சு. பத்மாவதி (ஆசிரியை) திருமதி க. கமலாதேவி (ஆசிரியை), திருமதி கு. லக்ஷ்மிதேவி (ஆசிரியை) திருமதி ம. தயாநிதி (ஆசிரியை), ஆகியோரின் அன்புத் தந்தையும் திரு. வை. ஆறுமுகம் (இளைப்பாறிய அதிபர்), திரு. மு. திருநாவுக்கரசு திருமதி அ. சண்முகநாதன் திரு S. கணேசலிங்கம் (R .M. P ) திரு வே. குணரத்தினம், திரு க. மகேந்திரநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், (Dr) திருமதி த. யசோதரா, (Dr) திருமதி ச. சசீதரா (U.K), ஆ. சபேசன் (மருத்துவக் கல்லூரி மாணவன்), தி. முரளீதரன், (சவூதி), தி. கிரிதரன், தி. ஸ்ரீதரன் (Quick Star Photo), திரு கலாதரா: திருமதி பு. வசுந்தரா, தி. சுமித்திரா, ச. குமரன், ச. காந்தன், ச. சயந்தன், ச. வரதன் கு. சிவானுஜா, கு. சேயோன், கு. சிவப்பிரிஜா, ம. சுபேந்திரன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், த. திவ்யா, ச. கிருஷ்ணி ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 25- 9- 90 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு 91/18 இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை கந்தர் மடம் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(R/663) தகவல் பிள்ளைகள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது




## மாணவர் கலந்துரையாடல்

சகல விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று நாளை (27-9-90) யாழ். பல்கலைக்கழககைலாசபதி கலை அரங்கில் காலை 10 · 00 மணிக்கு நடைபெறும் அனைத்து மாணவர் இயக்க அங்கத்தவர்களும் தவறாது சமுகம் தரும்படி கேட்கப்பட்டுள்ளனர். (க)

### வவுனியா

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவர் கடத்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜூன் மாதம் 29ஆம் திகதி வவுனியா நகரப்பகுதிக்குச்சென்று உணவுப் பொருட்கள் ஏற்றிவரச் சென்ற செட்டிகுளம் காணி உத்தியோகத்தர் திரு. எஸ். நாகராசா காணாமல் போனது தெரிந்ததே. அவர் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோல் அண்மையில் நகரப்பகுதி சென்று கொழும்புக்குப் பயணம் செல்வதற்காகச்சென்ற பூந்தோட்டம்பகுதியைச் சேர்ந்த சிவசாமி சிவபாலன் காணாமல் போய்விட்டார் என்பதும் இதுபற்றி இராணுவ அதிகாரிகளிடம் கேட்கப்பட்டபோது, தமக்கு இதுபற்றித் தெரியாது என்று கூறப்பட்டதாம். ஆயினும் இராணுவ காவல் அரண்பகுதியிலிருந்து இவரின் சைக்கிள் மீட்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (தி)

### சிறிலங்கா

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார் என்று சென்னைப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

### இருபணி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. ஆனால் விடுதலைப் புலிகளால் எல். எம். ஜி. ரக துப்பாக்கி ஒன்று, ரவைக்கூடு (றம் மகசீன்) ஒன்று, எல். எம். ஜி. ரவைக்கோர்வை 200, ரீ81 ரகத்துப்பாக்கி ஒன்று, ரவைகள் 500, கெல்மெட் ஒன்று ஆகிய பொருட்கள் மீட்கப்பட்டன.

குடியேற்றப்பட்ட சிங்களவர் வாழும் எல்லைப்புற பகுதியான பாவற்குளம் முதலாம் யுனிட் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமில் இருந்து அடிக்கடி இராணுவத்தினர் வெளியேறி இனஅழிப்பு நடவடிக்கைக்கு முயற்சித்த வண்ணமுள்ளனர். கடந்த இரு வாரங்களில் மட்டும் மூன்றுதடவைகள் அவர்களின் முயற்சியை விடுதலைப் புலிகள் முறியடித்துள்ளனர். இதில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டமையும் தெரிந்ததே.

### தம்பிலுவிலில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை கைது செய்து முகாமிற்கு கூட்டிச் சென்றனர். தற்பொழுது இவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பதும்இவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய தகவல் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

### வலுக்கட்டாயமாக

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முகாமுக்குச் செல்லுங்கள் என்று இராணுவத்தால் தெரிவிக்கப்பட்டதாம்,

ஆனாலும், குறிப்பிட்ட அகதி முகாமில் தங்கியுள்ள அகதி மக்களின் தொகைமிகக் குறைவு என்றே தெரிவிக்கப்பட்டது. (தி)

### நேற்றுமாலை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் அவ்ரோ விமானங்கள் கோட்டை முகாமிற்கு பொதிகளை போட்டதுடன் நகர் மீதும் குண்டுகளை வீசியது.

அதேவேளை மாலையில் மண்டைதீவு முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்களும் இடையிடையே நடைபெற்றது. (க

### 3,000 புலிகளை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்படி ஒரு பாடத்தினையே இலங்கையிற் கற்றுக்கொண்டனர் என்று மேலும் விபரித்தார்.

இந்த வகையில் வடக்குக் கிழக்கிலுள்ள விடுதலைப்புலிகளுக்கு எதிராகப் போராட வேண்டுமாயின்3,000புலிகளை அழித்தொழிக்க 60,000 இராணுவத்தினர் தேவை எனக் கூறியுள்ளார்.